**தெங்கு பயிர்ச்செய்கை சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தெங்கு பயிர்ச்செய்கை சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு )

சபையின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்வதும் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதும் எனது பொறுப்பாகும். இருந்த போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 2(அ) பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கை தனித்தனியாக வெளிப்படுத்தக்கூடிய வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | வரவு செலவுத் திட்ட புள்ளி விபரங்கள் மற்றும் உள்ளபடியான புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தக் கூடிய வகையில் 2021.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளுடன் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தேவைப்படும் போது அல்லது அனுமதிக்கப்படும் போது தவிர ஒன்றுக்கொண்டு எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும் மாதிரி தென்னந்தோப்பு பேரேட்டின் நடைமுறைக் கணக்கு ரூபா | நிதி நிலைமைக் கூற்று மிகவும் தெளிவாக மற்றும் சுருக்கமாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதால் மாதிரி தென்னந்தோப்பு பேரேட்டின் நடைமுறைக் கணக்கின் ரூபா 29,990,706 ஆன செலவு மீதி மற்றும் நாற்றுமேடை பேரேட்டு நடைமுறைக் கணக்கின் ரூபா 4,675,275 ஆன வரவு | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்படாது நடைமுறை சொத்து மீதி மற்றும் நடைமுறைப் பொறுப்பு மீதி நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 29,990,706 ஆன செலவு மீதி மற்றும் நாற்றுமேடை பேரேட்டு நடைமுறைக் கணக்கின் ரூபா 4,675,275 ஆன வரவு மீதி ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 25,315,430 ஆனது நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | மீதி நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | 2013 ஆம் ஆண்டில் நீண்டகால முதலீடொன்றாக ஆரம்பிக்கப்பட்ட பாசிக்குடா சுற்றுலா செயற்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 22,197,339 ஆன பெறுமதி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. மேலும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமொன்று கடந்து விட்ட போதிலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 13 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் அம்முதலீட்டுச் சொத்தின் நியாயமான மதிப்பு மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்து இயற்கையான இடத்தைக் கவனத்தில் கொண்டு நீண்டகால பயன்களை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பாசிக்குடா சுற்றுலா செயற்திட்டத்தின் தற்போதைய நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நியாயமான மதிப்பு 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும். | முதலீட்டுச் சொத்துக்களின் நியாயமான மதிப்பு மதிப்பிடப்பட்டு நடைமுறையல்லா சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியயம் 01 இன் 118 ஆம் பந்தியின் பிரகாரம் உரிமையாண்மையில் இனங்காணப்பட்ட ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையாண்மையில் இனங்காணப்பட்ட ஒவ்வொரு வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் ஒவ்வொரு கூறுகளுக்கும் இனங்காணப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொரு கூறுகளுக்கும் இனங்காணப்பட்டு கடந்த ஆண்டிற்கான தவறுகள் திருத்தங்களின் முடிவுகள் உரிமைகள் மாற்றங்கள் கூற்றில் தெளிவாக காட்டப்பட்ட வேண்டிய போதிலும், சபையின் மூலதன நிதியம், பொது நிதியம், மூலதன நிதியம் - கப்றுக மற்றும் உத்தரவாத நிதியம் தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்றில் தனித்தனியாக காட்டப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தின் பெயரில் விடயமொன்றாக காட்டப்பட்டிருந்தது. அவ்விடயங்களுக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களில் தேறிய விளைவு ரூபா 49,110,416 மட்டுமே தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த 03 கணக்குகளுக்கான பேரேட்டுக் கணக்கு மீதிகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதிகளுக்கிடையே ரூபா 501,767,769 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அவ்வேறுபாடு இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | கடந்த ஆண்டிற்கான தவறுகள் திருத்தங்களின் முடிவுகள் உரிமைகள் மாற்றங்கள் கூற்றில் தெளிவாக காட்டப்பட்ட வேண்டியதுடன் பேரேட்டுக் கணக்கு மீதிகள் அவ்வாறே நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இற்கு இணங்காத வகையில் காசு மற்றும் காசுக்குச் சமமானவையாக கருதப்படும் 03 மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 11,476,390 ஆன குறுங்கால | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசு வெளிப் பாய்ச்சல், காசு உட்பாய்ச்சல் மற்றும் குறுங்கால வைப்புக்கள் சரியாக வகைப்படுத்தப் பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான வைப்புக்களில் ரூபா 6,131,032 ஆனது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழும், ரூபா 5,345,358 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழும் காட்டப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய தொகையில் பெறப்பட்ட நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 905,159 உம், பெற வேண்டிய வட்டி ரூபா 137,925 உம் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே 03 மாதங்களில் முதிர்ச்சியடையும் குறுங்கால வைப்புக்கள் ரூபா 5,345,358 நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி வரை முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 375,410,404 ஆன கட்டிடங்கள், மோட்டார் வாகனங்கள், கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அச்சொத்துக்கள் பயனுள்ள ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றக்களில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றக்களில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 18 இன் | எதிர்வரும் சில வருடங்களிற்குள் மர | எதிர்கால பொருளாதார |

| | | | |
|---|---|---|---|
| | 13 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உள்வருவதற்கு எதிர்பார்க்கப்பட முடியுமானவை உயிரியல் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் 12 மாதிரி தென்னந்தோப்புக்களில் பலா, தேக்கு, போன்ற 38 வகையான மரங்களின் பெறுமதியொன்றுடன் 7,936 மரங்கள் மற்றும் 39 நாற்றுமேடைகளில் 46 வரையான மரங்களின் பெறுமதியுடன் 5,525 மரங்களுமாக மொத்தம் 13,461 மரங்கள் மற்றும் 39 நாற்றுமேடைகளின் 11,605 தென்னை மரங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 - 2021 இற்கு இடையிலான காலப்பகுதியில் மரமதிப்புள்ள 373 மரங்கள் வெட்டப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | மதிப்புள்ள மரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நலன்கள் நிறுவனத்திற்கு உள்வருவதற்கு எதிர்பார்க்கப்பட முடியுமானவை உயிரியல் சொத்துக்களாக இனங்காணப்பட வேணடும். மரங்களை வெட்டி அகற்றுவது சில முறையான முறைமைகளின் கீழ் செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 18 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் உயிரியல் சொத்தொன்று ஆரம்பத்தில் இனங்காணப்படும் போது மற்றும் அனைத்து அறிக்கையிடும் திகதியிலும் அளவிடப்பட வேண்டியது விற்பனைக் கிரயம் குறைக்கப்பட்டு அதன் நியாயமான பெறுமதிக்காக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கால்நடைகளின் எடையின் பிரகாரம் கணக்கிடப்பட்டு ரூபா 35,328,456 ஆன கால்நடைகள் மற்றும் ரூபா 359,988,832 ஆன நிறுவுதல் | சபையின் தென்னந்தோப்புக்களில் விற்கப்படுகின்ற கால்நடைகளின் எடைக்கு எற்பட விலை கால்நடைகள் சபையினால் வழங்கப்படுகின்ற விலை மற்றும் சந்தை விலை ஆகிய இரண்டும் கருத்தில் கொள்ளப்பட்டு குறைந்த பெறுமதிக்கு விலையிடப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டிலிருந்து சரியாக சமர்ப்பிக்கப்படும். | உயிரியல் சொத்துக்களின் விற்பனைப் பெறுமதியில் விற்பனைக் கிரயம் குறைக்கப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

செலவுகள் உட்பட உயிரியல் சொத்துக்கள் அறவிடப்பட்ட போது விற்பனைக் கிரயம் குஜறக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்நியமத்தின் 44(அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் உயிரியல் சொத்துக்களின் செயற்பாட்டுத் தன்மை மற்றும் காலப்பகுதியின் முடிவில் விவசாய உற்பத்திப் பொருட்களின் பௌதீக அளவுகளின் மதிப்பீடுகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தலைமை அலுவலகம் மற்றும் 12 மாதிரித் தென்னந்தோப்புக்களின் கொடுக்கல் வாங்கல்களை ஒருங்கிணைப்பதற்காக தலைமை அலுவலகம் மற்றும் அதற்குரிய மாதிரித் தென்னந்தோப்புக்களில் பராமரிக்கப்படுகின்ற பேரேட்டுக் கட்டுப்பாட்டு நடைமுறைக் கக்கு மற்றும் மாதிரி தென்னந் தோப்புக்களுக்கிடையே பராமரிக்கப்படுகின்ற நடைமுறைக் கணக்கிற்கு இடையே ரூபா 73,729,701 ஆன வரவு /செலவு ஆன வேறுபாடொன்றும் சபைக்குச் சொந்தமான 39 தென்னை நாற்றுமேடைகளின் நாளாந்த செலவுகள் கட்டுப்பாட்டிற்காக தலைமை அலுவலகத்தில் பராமரிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கிடையே ரூபா 4,675,275 ஆன வேறுபாடொன்று | நடைமுறைக் கணக்கு 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து இணக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2022 ஆம் கணக்காண்டில் அவ்வருடத்திற்கான சுயாதீனக் கணக்கை சமப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் நீண்டகாலமாக முன்கொண்டு வரப்பட்ட சமப்படுத்தப்படாத மீதிகள் தொடர்பாக கண்டறிவதற்கு மிகவும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தெரிவிக்கின்றேன். | வேறுபாட்டிற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் அம்மீதி நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்ட போதிலும் இவ்வேறுபாடுகள் தொடர்பாக இணக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் உரமானிய கடன் கொடுத்தோருக்கு 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,893,816 ஆன கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அவ்வருடத்தில் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்படட தவறு மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட போது ரூபா 7,893,816 இற்குப் பதிலாக ரூபா 13,510,360 கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடந்த வருடத்தில் சீராக்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் கடன்கொடுத்தோர் மற்றும் திரண்ட நிதியம் முறையே ரூபா 5,616,544 ஆல் குறைத்தும் மற்றும் அதிகமாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் திருத்தப்படும். | உர மானிய கடன்கொடுத்தோர் கணக்கிற்கு அதிகமாக வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 5,616,544 நீக்கப்படல் வேண்டும். |
| (இ) | தென்னை அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்கு மற்றும் மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய இளநீர் ஊக்குவிப்பு கட்டணம் முறையே ரூபா 23,433,807 மற்றும் ரூபா 23,368,203 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் பெறப்பட்ட | இளநீர் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பிற்காக பெறப்பட்ட 2020 ஆம் ஆண்டில் வருமானமாக கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்த ரூபா 25,000,000 ஆன தொகை எதிர்காலத்தில் குறிப்பிட்ட செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் | கட்டணமாக அட்டுறு அடிப்படையில் கணக்கு வைப்பதற்கும் இளநீர் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கும் பயன்படுத்து வதற்குத் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 25,000,000 மட்டுமே வருமானக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் ரூபா 1,631,797 அதிகமாகவும், பெற வேண்டிய வருமானம் ரூபா 21,802,010 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கப்றுக முதலீட்டுக் கடன் முன்மொழிவுத் திட்டத்தின் ''பிணை மேவுகை'' வைப்பு வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்படுவதற்காக 2020 திசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டு ஆனால் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது 2021 சனவரி வரையில் வைக்கப்பட்டிருந்த ரூபா 26,411,351 ஆன பெறுமதியான 07 காசோலைகள் செயற்திட்டத்தின் செலவொன்றாகக் கணக்கிடப்பட்ட காரணத்தினால் அப்பெறுமதியில் செயற்திட்டத்தின் செலவுகள் அதிகமாகவும், பிணை மேவுகை வைப்புக் கணக்கின் மீதி குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. | ''பிணை மேவுகை'' வைப்பு வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்காக எழுதப்பட்டிருந்த காசோலைகள் விரைவில் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு கணக்கீட்டு வழு திருத்தப்படல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் சபையின் இருப்பு தொடர்பான பௌதீகக் கணிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு இருப்புக்களின் தேறிய பெறுமதி அல்லது கிரயம் சரியாக இனங்காணப்படாது ரூபா 273,215,198 ஆன இருப்புக்களில் புத்தகப் பெறுமதி | பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன. | பௌதீக ரீதியாகக் காணப்படுகின்ற இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | | |
| (ஊ) | கடந்த வருடத்தில் கட்டிடத் திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,577,450 ஆன செலவொன்று கடந்த வருடத்தின் சீராக்கமொன்றாக கணக்கிடப்படுவதற்கு பதிலாக கட்டிட கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டதன் மூலம் கட்டிடக் கிரயம் மற்றும் திரண்ட மிகை அந்த அளவினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | மீண்டெழும் செலவுகள் கட்டிடக் கணக்கிலிருந்து நீக்கப்படல் வேண்டும். |
| (எ) | இந்தியாவில் உள்ள தனிப்பட்ட கம்பனியிடமிருந்து கறுப்பு வண்டு பெரமோன இறக்குமதி செய்வதற்காக கடன் மேவுகையொன்று பெற்றுக் கொள்வதற்காக 2020 திசெம்பர் மாதம் ரூபா 2,417,120 பெறுமதியான நிலையான வைப்பொன்று பிணையாக வைக்கப்பட்டிருந்த போதிலும் அத தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இதுவரை பணிகள் நிறைவடைந்துள்ளதால் அச்சான்றிதழை மீண்டும் சபைக்கு கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிரில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புக்கள் பியையாக வைக்கப் பட்டிருந்தமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படல் வேண்டும். |
| (ஏ) | 2020 திசெம்பர் 31 இல் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மைட்டா விலோபித இருப்பு ரூபா 2,094,043 ஆக இருந்த போதிலும், மைட்டா செயற்திட்டத்தின் மீளாய்வாண்டில் இலாபம் கணிப்பிடப்பட்டிருப்பதற்காக உட்படுத்தப்பட்ட இருப்பு ரூபா 1,495,920 ஆக இருந்தமையால் ரூபா 598,123 வேறுபாடு | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு அறிக்கையிடப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளது. | வருட இறுதியில் கணக்கீடு செய்யப்படுவதன் அடிப்படையில் சரியான பெறுமதியில் இருப்பு கணக்கிடப்படல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2018 ஆம் ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் பணிகள் முடிக்கப்படாத யாழ்ப்பாணம் தேவிபுரம் தென்னந்தோப்பு நிலையத்தில் தோப்பு பொறுப்பு உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ மனை நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 539,080 ஆக இருந்ததுடன், நடைமுறை வேலைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 263,450 மட்டுமே ஆகும். ரூபா 275,630 வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | சரியான பதிலொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. | செலுத்தப்பட்ட தொகையை விட கணக்கிடப்பட்ட தொகை ரூபா 275,630 குறைவாகக் காட்டப்பட்டமைக்கான காணரம் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | தொடர் புடைய அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| விதை தேங்காய் மற்றும் தென்னை மரக்கன்றுகளை கொள்வதற்கு செய்வதற்கு தென்னை ஆராய்ச்சி சபைக்கு செலுத்த வேண்டிய பணம் | 17,244,333 | 28,794,390 | 11,550,057 | 2020.12.31 இல் தென்னை அபிவிருத்திச் சபைக்கு விதை தேங்காய்களுக்காக ரூபா 13,444,533 உம், தென்னை மரக்கன்றுகளுக்காக ரூபா 3,799,800 உம் ஆகச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ரூபா 17,244,333 ஆகும். | காரணம் கண்டுபிடிக்கப் பட்டு வேறுபாடு நீக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| 26 கடன்பட்டோர் கணக்குகள் | ரூபா 17,880,698 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களைச் சமர்ப்பிக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்படுத்தல் மூலம் கடன்பட்டோர் மீதிகளின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| நிலையான வைப்பு | 30,415,239 | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் | 2021 ஆம் ஆண்டில் நிலையான வைப்பு தொடர்பாக தனியாக அட்டவணையொன்று தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புக்களுக்காக பதிவேடொன்றை பராமரிப்பதற்கும், அது தொடர்பான அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சேவையிலிருந்து விலகிச் சென்ற 99 ஊழியர்களிடமிருந்து 01 வருடம் தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலமாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,446,465 ஆன கடன் தொகையொன்று அறவிடப்படுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஊழியர் கடன் அறவிடப் படுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களில் வெலிகம | தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட | பெறவேண்டிய தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | நோய் பரவல் செயற்திட்டம் மற்றும் சேதன உரச் செயற்திட்டத்திற்காக தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 6,573,572 மற்றும் 2014 வருடத்தில் இலங்கை சதொசாவிற்கு தேங்காய் விற்பனை செய்ததன் மூலம் பெறவேண்டிய ரூபா 302,288 உம் ஆக மொத்தம் ரூபா 6,875,860 அறவிடப்படுவதற்கு சபை தவறியிருந்தது. | அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற வேண்டிய ரூபா 6,573,572 இற்காக நேரடி அமைச்சுடன் கலந்துரையாடி அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கான முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 நிர்மாண நடவடிக்கைகளுக்கான பிடிகாசான ரூபா 1,385,073 03 வருடங்க்ள தொடக்கம் 06 வருடங்கள் வரையான காலமாக தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி சந்தைக் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இரண்டு வருடங்கள் மேற்பட்ட பிடிகாசு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழைய பிடிகாசு தீர்க்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தற்போது சேவையிலிருந்து நீங்கிய 08 ஊழியர்களிடமிருந்து பெறப்பட்டிருந்த மொத்தம் ரூபா 583,066 ஆன ஊழியர் பிணை வைப்பு மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல வருடங்களுக்கு முன்பு சேவையாற்றிய 08 ஊழியர்களினால் வைக்கப்பட்டிருந்த இப்பிணை வைப்புத் தொடர்பாக மேலும் கண்டுபிடித்து தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கும் போது அவர்களது பெயரிலுள்ள பிணை வைப்பு மீதி தீர்க்கப்படல் வேண்டும். |
| (இ) | சபையின் மாதிரித் தென்னந்தோப்புக்களில் கிளிரிசிடியா பயிர்ச் செய்கை செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் வருடத்தில் நிறைவடைந்த | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் இரு வருடங்களுக்கு மேற்பட்டிருந்தமையால் 2021 ஆம் ஆண்டில் மாதிரி தென்னந்தோப்பு வருமானத்திற்கு | செலுத்த வேண்டிய மீதியொன்று தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அதற்காக 03 நிறுவனங்களின் பெயரில் ரூபா 4,676,402 ஆன செலுத்த வேண்டிய மீதியொன்று தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாற்றுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | 2011 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் குழாய்க்கிணறு செயற்திட்டத்திற்காக ரூபா 230,324 மற்றும் உர மானிய செயற்திட்டத்திற்காக ரூபா 568,452 உம் ஆக நேரடி அமைச்சிடமீருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்படாத மொத்தம் ரூபா 798,776 ஆனது தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கையின்றி வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்றதாக காணப்பட்டது. | அரச வருமானத்திற்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்படுத்தப்படாத செயற் திட்டங்களுக்கான அரச நிதி வருமானத்திற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(ஆ) பிரிவு | நிலையான வைப்பு முதலீடொன்றுக்காக நிதி அமைச்சரின் உடன்பாடு மற்றும் குறித்த அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், சபையின் 2020 திசெம்பர் 31 இல் 18 நிலையான வைப்புக்களில் முதலிடப்பட்ட ரூபா 92,394,311 இற்காக அவ்வாறு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இதன் பின்னர் நிலையான வைப்புக்களில் பணம் முதலீடு செய்யப்படும் போது நிதிச் சட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்புக்களை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் உடன்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை
------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 137 மற்றும் 138 | கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிச்சீட்டுக்களை அங்கீகரிப்பதற்கும், சரியாக மற்றும் முழுமையாக உள்ளதா என்பதை சான்றுப்படுத்துவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 301,277 பெறுமதியான 04 உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாது மற்றும் ரூபா 100,000,000 ஆன உறுதிச்சீட்டொன்று சான்றுப்படுத்தப்படாது செலுத்தப்பட்டிருந்தது. | நடப்பாண்டு வரையில் நிதிப் பிரிவினால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து உறுதிச்சீட்டுக்களும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு அனைத்து இணைப்புக்கள் மற்றும் கோவை இணைப்புக்கள் மற்றும் கொடுப்பனவின் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் உரிய அங்கீகாரம் பெறப்பட்டு குறிப்பிட்ட செலவுப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட பின்னர் உறுதிச்சீட்டு சான்றுப்படுத்தப்பட்டு உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிச்சீட்டுக்களை அங்கீகரிப்பதற்கும், சரியாக மற்றும் முழுமையாக உள்ளதா என்பதை சான்றுப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 381 | சபையினால் பேணப்பட்டு வருகின்ற 10 வங்கிக் கணக்குகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டதாக அவதானிக்கப்படாததுடன் ஊழியர்களுக்கான விழா முற்பணம் மற்றும் இடர் கடன் கொடுப்பனவுகளுக்காக தனித்தனியான நடைமுறைக் கணக்குகள் இரண்டு பேணப்பட்டு வருவதற்கான தேவைப்பாடு தொடர்பான விடயம் சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கி நடைமுறைக் கணக்குகள் திறக்கப்படும் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஊழியர்களுக்காக விழா முற்பணம் வழங்கப்படுகின்ற இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கின் மேற்கொண்ட தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு மூடப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தேவையற்ற வங்கிக் கணக்குகள் மூடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப் பிரமாணம் 395 | ஒவ்வொரு மாத இறுதியிலும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று ஒன்று தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்ற உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 03 வங்கிக் கணக்குகளுக்கு உரிய 22 மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | 03 வங்கிக் கணக்குகளுக்கான வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற தவறுகள் 2021.12.31 வரையில் திருத்தப்பட்டுள்ளதுடன் 971 இல் முடிவடையும் நடைமுறைக் கணக்கில் தவறு திருத்தப்பட்டு வருகின்றது. | இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுகின்ற உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 756 | 2020 திசெம்பர் 31 இல் சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாததுடன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அச்சொத்துக்களின் கிரயம் ரூபா 1,289,265,602 ஆகும். | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு தொடர்பாக பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | 2020 திசெம்பர் 31 இல் சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனசாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை<br>----------------------- | | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது | வெற்றிடமாகவுள்ள பதவிக்கு பதிற்கடமை நியமனமொன்று செய்யப்படுதலானது நிரந்தர நியமனமொன்று செய்யப்படும் வரையில் தற்காலிகத் தீர்வொன்றாகையால் அதன் அதிகபட்ச காலம் 03 மாதங்களாக மட்டுமே இருக்க வேண்டியதுடன், | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள போதிலும் 2021.08.31 ஆந் திகதிய அமைச்சரவை | வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு விரைவில் நிரந்தர பதவியணி நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | வெற்றிடங்கள் காணப்பட்ட 60 பதவிகளுக்காக தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 03 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்கள் 09 மாதங்கள் வரையான காலமொன்றாக பதிற்கடமை அடிப்படையில் பேணப்பட்டு வந்தது. சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) பதவி மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நீடிப்பு மற்றும் அபிவிருத்தி) பதவிகளும் அவற்றில் காணப்பட்டன. | பத்திரத்தின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புக்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுவதற்கான அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பந்தி | பதிற்கடமைச் சம்பளம் செலுத்துவதற்காக அமைச்சரவை செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாததுடன் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட பதிற்கடமைச் சம்பளம் ரூபா 4,925,474 ஆகும். | கருத்து வழங்கப்படவில்லை. | அமைச்சரின் செயலாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட பதிற்கடமை சம்பளம் சட்டரீதியற்ற கொடுப்பனவாக கருதப்படல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4. மற்றும் 5.2.5 பந்திகள் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அதன் பிரதி நேரடி அமைச்சிற்கு, பொதுத்திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமொன்று இல்லாது மீளாய்வாண்டில் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. | 2020 நிதியாண்டில் இடைக்கால வரவு செலவுத் திட்டமொன்றின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் கீழ் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் செலவுத் தலைப்புக்கள் செயற்படுத்தப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று செயற்படுத்தப்பட்டது. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரித்து உரிய நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 131,470,030 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 141,088,348 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,618,318 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. சபையின் மீளாய்வாண்டின் அபிவிருத்தி செயற்திட்டச் செலவுகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 232,268,006 ஆல் அதிகரித்தமை செயற்பாட்டு விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென்னை பயிர்ச் செய்கை சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் கிரயம் ரூபா 1,513,300,588 ஆன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 07 சொத்துத் தொகுதிகளுக்கான கிரயம் ரூபா 86,383,238 ஆன சொத்துக்கள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பான பகுப்பாய்வொன்று எதிர்வரும் வருடங்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து சொத்துக்களும் உறுதியாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டு ஆனால் விவசாயிகளின் வங்கிக் கணக்கு செயற்பாடற்று இருந்ததால் மீண்டும் சபையின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த அரச உரமானியத் தொகை ரூபா 26,888,839 திறைசேரிக்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது "இரத்துச் செய்யப்பட்ட காசோலை" பெயரில் பொறுப்புக்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு | அரச வருமானத்திற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விவசாயிகளுக்கு வழங்கப்படாத அரச உர மானியத் தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்க்கப்படாது நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | 03 வங்கிக் கணக்குகளுக்கான மொத்தம் ரூபா 65,989 ஆன இனங்காணப்படாத வரவு மீதிகள் மற்றும் மொத்தம் ரூபா 2,497,497 இனங்காணப்படாத செலவு மீதிகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்றி நீண்டகாலமாக வங்கி இணக்கக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டன. | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதாந்த வங்கிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள அனைத்துப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் சரியாக இனங்காணப்பட்டு அந்தந்த மாதங்களின் கணக்கு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கப்றுக் முதலீட்டு கடன் திட்டத்தின் கீழ் கடனைத் திருப்பி செலுத்தாத அபாயத்தை ஈடுசெய்வதற்காக செலுத்தப்பட்டிருந்த கடன் தொகையில் சபையினால் 10 சதவீத வீதமும், வங்கியினால் 0.5 சதவீதமும் ஆக பங்களிப்புச் செய்யப்பட்டு அந்தந்த வங்கிகளில் பேணப்பட்டு வருகின்ற உத்தரவாதக் காப்பீட்டு சாதாரண சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாணடின் இறுதியில் மீதி ரூபா 34,628,880 ஆக இருந்ததுடன் கடன் திட்டம் ஆரம்பத்திலிருந்து 20 வருட காலங்களில் 22 கடனாளிகளின் சார்பாக செலுத்த வேண்டியேற்பட்ட உத்தரவாத காப்பீடு ரூபா 1,770,326 ஆகும். அதன் பிரகாரம் கடன் திருப்பிச் செலுத்தாத அபாயம் மிகவும் குறைந்த மட்டத்தில் இருக்கும் போது | கணக்குகளில் வைக்கப்படும் தொகையை மேலும் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு மேலதிக பணம் உயர்ந்த வட்டி விகிதமொன்றை வழங்கும் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் உத்தரவாத காப்பீட்டு பங்களிப்பு விகிதம் மீண்டும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன் தொகையில் 10 சதவீதம் அதிக தொகையொன்று சபையின் பங்களிப்பாக சாதார சேமிப்புக் கணக்குகளுக்கு உரிய வட்டியின் கீழ் வங்கிக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 2016 தொடக்கம் 2019 வரையான கடந்த 04 வருட காலப்பகுதியில் முறையே 2,733,684, 737,418, 1,413,010 மற்றும் 484,774 காய்களாக இருந்த விதை தேங்காய் உற்பத்தி மீளாய்வாண்டில் 327,587 தேங்காய்களாகக் குறைவடைந்திருந்தது. | தேங்காய் மரக்கன்றுகள் உற்பத்திக்கான நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் விதை தேங்காய் வழங்குதல் வருடாந்தம் கூடி குறைகின்றது. | வருடாந்தம் தென்னை மரக்கன்றுகளின் தேவை மற்றும் நாற்றுக்களின் திறனைக் கருத்திற் கொண்டு விதை தேங்காய் உற்பத்தி செய்யப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைவர், முகாமையாளர் மற்றும் பிரதி முகாமையாளர் (நிதி) ஆகியோர் அடங்கிய கட்டுப்பாட்டுச் சபையால் நிர்வகிக்கப்படுகின்ற தனிப்பட்ட கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டு வருகின்ற சபையின் ஊழியர் சேமலாப நிதியத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களால் 2015-2021 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 50 சந்தர்ப்பங்களில் 50 காசோலைகள் தமது பெயரில் மற்றும் உறவினர் பெயரில் எழுதப்பட்டு ரூபா 73,839,369 ஆன நிதியத்தின் நிதி மோசடி | தற்போது முறையான முறைமையொன்று பின்பற்றப்பட்டு நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கையளித்தல், மனிதவள முகாமைத்துவப் பிரிவின் பரிந்துரையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்தல், உள்ளகக் கணக்காய்வு பிரிவின் முழுமையான பரிசோதனைக்கு பின்னர் காசோலைகள் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவுதல், உள்ளக கணக்காய்வினை மேற்கொள்தல், கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப் படல், நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கையளித்தல், முறையான உள்ளக மற்றும் முறைமை ஒன்றை தயாரித்தல், நிதியத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளதாக விசேட விசாரணையொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நிறுவப்பட்டு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை, கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாது ஒரேயொரு அதிகாரிக்கு பல வருடங்களாக நிதியத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை, நிதியத்தின் நடவடிக்கைகள் தொழில் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்காமை போன்ற விடயங்களின் பிரகாரம் நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபை தனது பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றாமையும் இம்மோசடிக்கு காரணமென்பது அவதானிக்கப்பட்டது. மோசடி செய்யப்பட்ட பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை என்பதுடன் பொறுப்புவாய்ந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பது மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகளை தொழிலாளர் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வருதல், மோசடி செய்யப்பட்ட பணம் அறவிடப்படுவதற்கு முடியுமான வகையில் வழக்கு நடவடிக்கைகள் போன்றவை மெற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 1997 மற்றும் 1999 ஆம் வருடங்களில் சபையில் தேங்காய் கொள்வனவு செய்த இரண்டு தனிப்பட்ட கம்பனிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய | 1999 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இவ் வழக்கு தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | சட்டரீதியாக நடவடிக்கைகள் முறையாக நடாத்தி பணம் அறவிடப்படுவதற்கு சபையின் |

| | | |
|---|---|---|
| ரூபா 3,808,156 ஐ அறவிடுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ள போதிலும் அவ்வழக்கு முறையாக கையாளப்படாது 23 மற்றும் 24 வருட காலமாக அத்தொகை அறவிடப்படாதிருந்தது. இதில் ரூபா 2,631,781 ஆன தொகையொன்று அறவிடப்பட வேண்டிய டபிள்யூ.ரீ.வாஸ் மற்றும் கம்பனியை கண்டுபிடிக்க முடியவில்லை எனக் குறிப்பிட்டு 2017 ஆம் ஆண்டில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு முடிக்கப்பட்டிருந்த போதிலும் அக்கம்பனி 2020 ஆம் ஆண்டில் தரகுக் கம்பனியாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்து தேங்காய் ஏலத்தில் பங்கேற்றிருந்தமை அவதானிக்கப்பட்டதால் இவை சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் என்பது அவதானிக்கப்பட்டது. | | அதிகாரிகள் முறையாக கடமைகளை மேற்கொள்ளாமை தொடர்பாக கண்டுபிடித்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 இன் 40 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி (திருத்திய) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளடங்கியுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் இலங்கையில் உள்ளூர் நுகர்வுத் தேவை மற்றும் ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, தன்னிறைவை அடைந்து கொள்வதற்காக பயனுள்ள ஆலோசனை மற்றும் | புறச்சூழலின் பாதிப்புக்களால் வயலில் பயிரிடப்படும் தென்னையில் உற்பத்தி மரங்களாக மாறும் அளவு பொதுவாக 60 சதவீதம் மட்டுமே என்பதால் 2003 ஆம் ஆண்டிலிருந்து சபையின் விநியோகிக்கப்பட்ட 36.41 மில்லியன் தென்னை மரக்கன்றுகளில் 21.8 மில்லியன் மட்டுமே வயலில் நிறுவப்பட்டுள்ளன. தென்னை காணிகளில் | இனங்காணப்பட்ட சிக்கல்களைக் குறைப்பதன் தன்னிறைவு நிலைமை அடைவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பணிகளை செயற்திறனுடன் செய்ய வேண்டும். |

விரிவாக்க சேவைகள் முதல் தேங்காய் உற்பத்தியை அதிகரித்தல், தென்னங் காணிகளின் உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலம் தென்னை விவசாயிகளுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதே சபையின் நோக்கமாக இருப்பதுடன் வருடாந்தம் அதற்காக ரூபா 638 மில்லியன் செலவொன்று செய்யப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் உணவு, தேங்காய் எண்ணை உட்பட ஏனைய விபத்துக்கள் மற்றும் ஏற்றுமதி தேவைக்கான தேங்காய்வகள் 3,418 மில்லியனில் 626 மில்லியன் தேங்காயகள் பற்றாக்குறையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

கணிசமான அளவு வயதாகியிருந்தமையால் நகர மயமாக்கலின் விளைவாக ஆண்டுக்கு 20,000 ஏக்கர் தென்னை விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதன் பிரகாரம் 2003-2013 வரை 11 வருடங்களில் தீவிலுள்ள 14.08 மில்லியன் தென்னை மரக்கங்களின் விளைச்சல் குறைவதுடன் மீதமுள்ள தென்னை மரக்கன்றுகள் சுமார் 7.72 மில்லியன் மட்டும் 120,625 ஏக்கர் மட்டுமே ஆகும். புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் 2002 தொடக்கம் 2014 வரை அதிகரித்துள்ள தென்னை ஏக்கர்களின் அளவு 112,000 மட்டுமே ஆகும்.

(ஆ) 2003 இன் 40 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி (திருத்திய) சட்டத்தின் சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடமைகளின் படி முறையான விளைச்சல் முறைமை அறிமுகப்படுத்துவதற்காக சபையினால் 12 மாதிரி தென்னந்தோப்புக்களை பராமரித்து வருகின்ற போது அவற்றின் 3,790.07 ஆன மொத்த ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு 3,135.83 ஏக்கராகவும், விளைச்சல் தருகின்ற தென்னை பயிரிடப்பட்ட 1,668.98 ஏக்கரில் விளைச்சல் தரக்கூடிய 106,834 தென்னை மரங்களில் 2020 ஆம் ஆண்டில் விளைச்சல் 5,024,208 தேங்காய்களாக இருந்தது. அவ்விளைச்சல் 2019 ஆம் ஆண்டை விட

தேசிய விளைச்சல் குறைவடைந்தமை, சபைக்குச் சொந்தமான பெருமளவு இடங்களில் S1 மற்றம் S2 மண் குழுக்களைக் கொண்ட நிலப்பற்றாக்குறை காரணமாக நீண்ட வறண்ட காலங்களில் நீர் மற்றும் ஊட்டச்சத்து தக்க வைப்புக் குறைவடைவதால் விளைச்சல் குறைவடைதல், ஊடுபயிர் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றால் தரிசு மரங்களை நடுதல், தரிசு மரங்கள் விலங்குகளால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதும் சிரமமாக இருந்ததால் எதிர்பார்த்து பலன் கிடைப்பது கடினமாக இருந்தது.கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக போக்குவரத்துச்

சட்டத்தால் பரிந்துரைக்கப்பட்ட பணிகளுக்கு ஏற்ப முறையான விளைச்சல் முறைமைகளை அறிமுகப்படுத்தும் வகையில் மாதிரி தென்னை தோட்டங்களை திறமையாக பராமரித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | 1.47 மில்லியன் அதாவது 23 சதவீதமும், மதிப்பிடப்பட்ட தேங்காய் விளைச்சலை விட 1.69 மில்லியன் காய்கள் குறைவாக இருந்தன. 09 தென்னந்தோப்புக்களில் ஒரு தென்னை மரத்தின் வருடாந்த சராசரி 60 காய்களுக்கும் குறைவாக இருந்தமை, 24,209 தென்னை மரங்கள் நடப்பட வேண்டியிருந்தமை, 44 சதவீதமான 106,834 மரங்கள் காய்க்காமை, பூச்சி சேதம் மற்றும் பிற காரணிகளால் 1,300,617 காய்களில் 26 சதவீதம் விளைச்சல் இல்லாமை போன்ற காரணங்களினால் மாதிரி அளவில் தென்னந்தோப்புக்கள் பராமரிக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சிக்கல்கள் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் பற்றாக்குறை, கரும்புள்ளிகள் மற்றும் சிறிய காய்களின் சதவீதத்தை கட்டுப்படுத்துவதற்கு இயலாமை ஆகியனவும் காரணமாகும். | |
| (இ) | பாசிக்குடா மற்றும் தர்ம கர்ணி போன்ற ஆகிய இரண்டு தென்னந்தோப்புக்களில் 2020 ஆம் ஆண்டில் ரூபா 16,133,667 ஆன வருமானம் ரூபா 8,926,381 ஆல் அதிகரிக்ககப்பட்டு ரூபா 25,060,048 ஆன செலவொன்று செய்யப்பட்டு இவ்விரண்டு தென்னந் தோப்புக்களும் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி வருவதாக அவதானிக்கப்பட்ட போதிலும் அச்செயற்திட்டங்கள் வெற்றியடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர் இத்தென்னந் தோப்புக்களால் தென்னைப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பளையில் 18,357 தென்னை மரக் கன்றுகளும் பாசிக்குடாவில் 9,286 தென்னை மரக்கன்றுகளும் நாட்டப்பட்டு இதுவரை 30 சதவீதம் மட்டுமே உற்பத்தி நிலையை எட்டியுள்ளது.மரக்கன்றுகளின் அறுவடை மூலம் அடுத்த 03 ஆண்டுகளில் படிப்படியாக இலாபகரமாக மாறும். | நட்டத்திற்கான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 - 2018 ஆம் ஆண்டுகளுக்கிடையேயான | எமது தெங்கு அபிவிருத்தி அதிகாரிகளின் | அரசின் உர மானியத் தொகை |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் பிரதேச அலுவலகத்தினால் விவசாயிகளுக்கு ரூபா 1,002,721,100 ஆன மானியத் தொகை செலுத்தப்பட்டிருந்தும், அது தொடர்பான பின் தொடரலொன்று மேற்கொள்ளப்படாமையால் அரசின் உர மானியப் பணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டதென்பது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பரிந்துரையின் பிரகாரம் இத்திட்டத்தின் கீழ் உரம் பயன்படுத்தப்படுவதற்காக பெருமளவு எண்ணிக்கையான பயனாளிகளுக்கு காசோலைகள் மூலம் உதவிப்பணம் வழங்கப்பட்டதுடன் பின்தொடரல் மேற்கொள்ளப்படுவதற்கு போதுமானளவு ஊழியர் எண்ணிக்கையொன்று எம்மிடம் இருக்கவில்லை. | ஆக்கபூர்வமாக பயன்படுத்தப் பட்டதென்பதை உறுதிப்படுத்து வதற்கான முறையான பின் தொடரல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | தென் மாகாணத்தில் “வெலிகம தென்னோலை வாடுதல் நோய்” மற்றும் “இலை அழுகல் நோய்” கட்டுப்படுத்துவதற்காக அகற்றப்பட்டிருந்த நோயுற்ற தென்னை மரங்கள் 275,942 இற்காக ரூபா 580,956,180 ஆன நட்டஈட்டுத் தொகையொன்று உட்பட நோயைக் கட்டுப்படுத்துவதற்காக 2013 - 2020 காலப்பகுியில் ரூபா 131,673,048 ஆன செலவொன்று செய்யப்பட்டுள்ளது. எனினும் 1999 இன் 55 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் 4(2) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இன்ங்காணப்பட்டுள்ள நோயுற்ற 11,240 மரங்கள் அகற்றப்படாததால் நோயை கட்டுப்படுத்தவோ அல்லது ஒழிப்பதற்கோ முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நோய் அறிகுறிகள் காணப்பட்ட மரங்களில் அதிக காய்கள் அச்சந்தர்ப்பத்தில் இருந்தமையால் பயிர்ச் செய்கையாளரினால் அகற்றப்படவில்லை. அவை சபையினால் இராசாயனப் பொருட்கள் (கிளயிடொசேட்) பயன்படுத்தப்பட்டு அழிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இல்ஙகையில் கிளயிடொசேட் இரசாயனம் தடை செய்யப்பட்டதால் அம் மரங்களின் அளவு அழிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. | தாவரப் பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நோயை ஒழித்தல் அல்லது கட்டுப்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | தென்னை விளைச்சலை அடிப்படையாகக் கொண்ட ஒரு இலாபகரமான வணிகமாக செயல் விளக்க அளவில் மாதிரித் | நிலவிய கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் ஊழியர்களின் வருகை நலிவான நிலைமையில் காணப்பட்டதுடன் தற்போது | தென்னந் தோப்புக்களை இலாபகரமான வணிகமாக முன்மாதிரியாக |

| | | | |
|---|---|---|---|
| | தோப்புக்களை பராமரிப்பதன் மூலம் உயர்தர நிலைமையில் விதை தேங்காய்கள், தென்னங்கன்றுகள் உட்பட நுகர்வோருக்கு உபபயன்கள் மற்றும் உபபொருட்களை விநியோகிக்கும் நோக்கத்திற்காக தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மேலதிகமாக தும்பு, கொப்பரா, தேங்காய் சிரட்டை கரி, தேங்காய் மட்டை சிப்ஸ், தேங்காய் எண்ணெய், தென்னங்கன்றுகள், ஊடுபயிர்ச் செடிகள், மற்றும் உர உற்பத்தியொன்று, ஊடு பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, சுற்றுலா விடுதி, மற்றும் கப்துறுபாய கடைகளை நடாத்துதல். தென்னந் தோப்புக்களில் சாத்தியக்கூறுகளின் பிரகாரம் செல் மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை, தென்னை சுற்றுலாத் திட்டம் மற்றும் களிரிசீடியா திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டம். எனினும், மீளாய்வாண்டு வரை நடாத்தப்பட்டு வந்த பல திட்டங்கள் நிறுத்தப்பட்டு விட்டதாலும் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படாததாலும் தென்னந்தோப்புக்களில் இலாபகரமான வணிகமொன்றாக முன்மாதிரியான நிலையில் நடாத்தப்பட்டு வருவது அவதானிக்கப்படவில்லை. | மீண்டும் திட்டங்கள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | நடாத்திச் செல்ல வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் 7 செயற்திட்டங்களின் கிழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 800 மில்லியன் ஆன ஒதுக்கங்களில் ரூபா 226.72 | ஒதுக்கங்களில் ரூபா 240 மில்லியன் திசெம்பர் மாதத்தில் பெறப்பட்டிருந்தமை மற்றும் கொவிட் தொற்றுநோய் | முறையாகத் திட்டமிடப்பட்ட வேலைத்திட்ட மொன்றின் கீழ் ஒதுக்கங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அதாவது 28 சதவீதம் சேமிக்கப்பட்டமை, 1,660,000 தென்னங்கன்றுகளுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 83,000,000 ஆன மானியத் தொகையில் ரூபா 49,983,200 ஆனது அதாவது 60 சதவீதம் சேமிக்கப்பட்டமை, மேலும் 04 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 5 தொடக்கம் 64 சதவீதத்திற்கு இடையேயன வீச்சில் உள்ளமை போன்ற விடயங்களின் பிரகாரம் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்தினை அடைய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலைமை களக் கடமை நடவடிக்கைகளை பாதித்திருந்தது. | செயற்திறனாகப் பயன்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் சபையின் முன்மாதிரி தென்னந் தோப்புக்களில் பெறுவதற்குத் திட்டமிடப்பட்ட 6,735,000 தேங்காய்களில் பெறப்பட்ட பயனுள்ள தேங்காய்கள் 5,022,976 ஆக இருந்ததுடன், தென்னை நார் மற்றும் தென்னை அரிசி உற்பத்தி மூலம் ரூபா 11,781,000 மற்றும் கால்நடை வளர்ப்பு பராமரிப்பு செயற்திட்டத்தில் ரூபா 16,914,764 ஈட்டப்படுவதற்கு திட்டமிடப்பட்டாலும் ஈட்டப்பட்ட வருமானம் முறையே ரூபா 3,491,040 மற்றும் ரூபா 7,608,885 ஆகும். மேலும் 03 தென்னை மாதிரித் தென்னந்தோப்புக்களில் ஊடுபயிர் செடிகளை விற்பனை செய்வதன் மூலம் திட்டமிடப்பட்ட ரூபா 4,878,000 ஆன வருமானம் ஈட்டப்படாதாதுடன் ரூபா 27,158,090 ஆன | இரசாயன உரங்களைப் பயன்படுத்தாமை, மழை வீழ்ச்சி குறைவடைந்தமை மற்றும் அதிக வெப்ப நிலை ஆகியவை உற்பத்தியைப் பாதித்திருந்தன. தென்னை நார்களை வாங்கும் முக்கிய நாடான சீனா தென்னந் தோப்புக்களைப் பெறுவதை நிறுத்தி கொண்டதால் போதியளவு விலையின்மை மற்றும் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை இதனைப் பாதித்துள்ளது. | முறையாகத் திட்டமிடப்பட்ட நோக்கமொன்றுடன் மாதிரி தென்னந் தோப்புக்கள் செயற்திறனாக நிர்வகிக்கப்பட்டு அதிகபட்ச முன்னேற்ற நிலையை அடைதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமொன்று ஈட்டப்படும் எதிர்பார்ப்புக்களில் ரூபா 12,701,010 ஆன செலவொன்று செய்யப்பட்டு பக்கப்பயிர் விளைச்சல் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 4,986,688 ஆகும். இதன் காரணத்தினால் மாதிரித் தென்னந்தோப்புக்களில் திட்டமிடப்பட்ட முன்னேற்றம் அடையப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஐ) | தென் மாகாணத்தில் ‘‘வெலிகம தென்னோலை உதிர்வு நோய்’’ மற்றும் ‘‘இலை அழுகல் நோய்’’ ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக வெட்டப்பட்ட நோயுள்ள மரங்கள் 308,056 இற்காக வழங்கப்பட்ட நோயொதிர்ப்புத் தென்னை மரக்கன்றுகளின் எண்ணிக்கை 88,478 மட்டுமே என்பதுடன் 2018 - 2020 காலப்பகுதியில் நில உரிமையாளர்களுக்கு மாற்றுப் பயிர்ச் செடிகள் விநியோகிக்கப்படாத காரணத்தினால் விவசாயிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்தும் பணி முறையாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | இந்நோயைத் தாங்கும் வகையில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பச்சைக் குத்திரா, ரக தென்னங் கன்றுகள், 5200 வழங்கப்பட்ட போதும், அவை மிகச்சிறிய தென்னை ரகமாக இருப்பதால், மாற்றுவழியொன்று இல்லாமையால் பொருளாதாரப் பயன் ஒன்றாக பயன்படுத்த முடியாத போதும் அந்த ரகத்திற்கு உரிய தென்னங் கன்றுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரை நோயெதிர்ப்பு திறன் கொண்ட தென்னை விகை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படவில்லை. இதுவரை மாற்றுப் பயிர்களை விரும்பும் விவசாயிகளுக்கு பக்கப் பயிர் மானியமொன்று வழங்கப்படுகின்றது. | நோயைக் கட்டுப்படுத்தும் முறைமை செயற்படுத்து வதற்கும், விவசாயிகளின் பொருளாதார நிலைமை உயர்த்தும் பணியை முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகனத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்கொழும்பு விதை மற்றும் தென்னந்தோப்பில் புதிய அலுவலகக் கட்டிடமொன்று | தற்போது புதிய நிர்மாணங்களுக்காக வழங்கப்பட்டுள்ள எல்லை | தேவையான ஒதுக்கங்கள் ஒதுக்கப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுவதற்குத் தேவையான ஒதுக்கங்கள் ஒதுக்கப்படாது அந்நிர்மாணத்திற்கான பெறுகை ஆவணங்கள், திட்டம் மற்றும் அளவுப் பத்திரம் தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் தனிப்பட்ட மதியுரைக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,149,273 விளைவற்ற செலவொன்றாகக் காணப்பட்டது. | மற்றும் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொண்ட கணக்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை என்பதுடன் விளைவற்ற செலவுகளுக்காக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாசிக்குடாவில் உத்தியோகபூர்வ மனையொன்று நிர்மாணிப்பதற்காக 2006 அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3(அ) வழிகாட்டிக்கு முரணாக இக்டாட் நிறுவகத்தின் (ICTAD) பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரருக்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 10,321,851 இற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் 94 சதவீதமான ரூபா 9,697,964 செலுத்தப்பட்டிருந்தும் 2015 ஆம் ஆண்டில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. | செயலாற்றல் போதியளவு இல்லாமையால் 2016 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த அளவீடுகள் பெறப்பட்டு ஒப்பந்தக்காரரினால் முடிக்கப்பட்ட பணிகளுக்காக செலுத்த வெண்டிய தொகை நிர்மாண ஆலோசகரின் பரிந்துரைக்கு இணங்க செலுத்தி அந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டது. | உத்தேச நிர்மாணத்தை தாமதமின்றி முடித்தல் வேண்டும். |
| (இ) | குருணாகல் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ மனையின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,108,886 ஆன இரண்டாம் கட்ட நிர்மாண நடவடிக்கைகள் கட்டிடத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டில் ரூபா | கட்டிடத் திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணம் மீளப் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணத்தை மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 744,405 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டும் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட தொகை 6 வருடங்களாக நடைமுறை வேலைக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென்னை பயிர்ச்செய்கை சபையின் 2020 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 918 உம், உள்ளபடியான பதவியணி 664 உம் என்பதுடன் பிரதி முகாமையாளர் (நிதி முகாமைத்துவம்) மற்றும் பிரதி முகாமையாளர் (நீடிப்பு மற்றும் அபிவிருத்தி) போன்ற சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 02, மத்திய மட்டத்தில் முகாமையாளர் பதவிகள் 08, கனிஷ்ட முகாமைத்துவ பதவிகள் 51, முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 165 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 28 பதவிகளுமாக வெற்றிடங்கள் காணப்பட்ட 254 பதவிகள் நிரப்பப்படுவதற்கு அல்லது பதவியணி தேவைப்பாடு பரிசீலிக்கப்பட்டு அது திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பினை ஊக்கப்படுத்தாமையால் இதுவரை அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | தகுதியின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு அல்லது பதவியணி மீள்பரிசீலனை செய்து திருத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தில் நடாத்தப்பட்டு வருகின்ற தோட்டப் பிரிவின் 145 நிரந்தர பதவியணியில் 43 உம், 10 ஆன ஒப்பந்த பதவியணியில் 8 உம் | மாதிரி தென்னந்தோப்புக்களின் உற்பத்தி திறனைப் பேணுவதற்காக அவசியமாக ஆட்சேர்க்கப்பட வேண்டிய பதவிகளின் வெற்றிடங்கள் தொடர்பாக மற்றும் | தகுதியின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு அல்லது பதவியணி மீள்பரிசீலனை செய்து திருத்தப் படுவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வெற்றிடங்களாகக் காணப்படுவது 12 மாதிரித் தென்னந்தோப்புக்களின் நடவடிக்கைகளை முறையாக பராமரித்துச் செல்வதில் பாதிப்பை ஏற்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | எண்ணிக்கை தொடர்பான பரிந்துரைகள் பெறப்பட்டு ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைபு வருடாந்த அறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 09 மாதங்கள் 15 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2021 நவம்பர் 15 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்களில் இத்தாமதத்தை தடுப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் வரைபு வருடாந்த அறிக்கையுடன் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |